செ.வெ.எண் -12 நாள்:08.01.2018

**அரியலூர் மாவட்டத்தில் ஒவ்வொரு திங்கட் கிழமை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வரும் பொதுமக்களுக்கு இலவசமாக கோரிக்கை மனு எழுதித்தர மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு பல்வேறு கிராமங்களிலிருந்து கோரிக்கை மனு அளிக்க வரும் பொதுமக்கள் வசதிற்காக கற்கும் பாரதம் பணியாளர்களைக் கொண்டு இலவசமாக கோரிக்கை மனு எழுதித்தர 24.07.2017 அன்று முதல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவின்படி, தொடர்ந்து இப்பணி நடைபெற்று வருகிறது.

எனவே, கோரிக்கை அளிக்க வரும் பொதுமக்கள் அனைவரும் இலவசமாக கோரிக்கை மனு எழுதிப்பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.